Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 54/2023 |
| Deposition of Witness of PW | : | Prosecution – D.W. 1 |
| | | Defence |
| | | Court |
| Name | : **கலா** | |
| Father / Husband Name | : **முத்துக்குமார்** | |
| Village | : **மினாக்குளம்** | |
| Taluk | : **திருச்சுழி** | |
| Caste | : | |
| Calling | : **விவசாய கூலி** | |
| Religion | : | |
| Age | : 34 | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 10.02.2026

**முதல் விசாரணை :-**

1. **நான் மினாக்குளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயக் கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன**

முத்துக்குமாருக்கும் எனக்கும் கடந்த 2011ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்தவுடன் என் கணவருடன் ஆந்திர மாநிலம், கரீம்நகர் மாவட்டத்தில் ஜெட்டியால் என்ற பகுதியில் என் கணவர் முத்து டிபன் சென்டர் என்ற பெயரில் ஹோட்டல் நடத்தி வந்தோம். எங்கள் திருமண உறவின் மூலம் 2013ம் ஆண்டு சர்மிளா என்ற பெண் குழந்தை பிறந்தது. தொடர்ந்து அங்கேயே வசித்து வந்தோம்.

2. கடந்த 2020ம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றின் காரணமாக நாங்கள் மினாக்குளம் கிராமத்திற்கு வந்தோம். ஹோட்டல் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் என் கணவருக்கு சொந்தமான இடத்தை விற்று கடனை அடைத்தோம். கடன் அதிகமானதால் என் கணவர் மன உளைச்சலுக்கு உள்ளாகி மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார். கடந்த 2021ம் ஆண்டு ஜூலை மாதம் மதுரை பெரியார் பேருந்து நிறுத்தத்திற்கு சற்று தொலைவில் அமைந்துள்ள குவாலிட்டி கேர் மருத்துவமனையில் மருத்துவர் சபரி சஞ்சீவ் ராஸ் என்பவரிடம் சிகிச்சைக்காக சென்றோம். அப்போது கொரோனா பெருந்தொற்றின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்க இயலாது எனக் கூறியதால் அங்கு தெரிந்த நபர்கள் வீட்டில் தங்கி மருத்துவமனையில் மருந்து மாத்திரை வாங்கி சிகிச்சை எடுத்து வந்தோம். என் கணவருக்கு மேற்சொன்ன மருத்துவர் பரிந்துரைத்த மருந்து சீட்டு மற்றும் அதனை வாங்கியதற்கான **மருத்துவ பில்கள் மற்றும் ஆய்வறிக்கை (Lab Report) மொத்தம் 22 தாள்கள் கொண்டது எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. அதன் பிறகு 6 மாதங்கள் அல்லது ஓராண்டுக்கு ஒருமுறை மருத்துவரை சந்தித்து மருந்துகள் வாங்கி வந்தோம். அதன் பிறகு ஆந்திராவிற்கு என் கணவர் சென்ற போதும் தொடர்ந்து கடையை நடத்த

முடியாததால் சொந்த ஊருக்கு திரும்பி விட்டார். ஊரில் இருந்தபோது தவறான நபர்களுடன் சேர்ந்து மது பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டார். மதுரையில் உள்ள வேல் பவுண்டேசன் என்ற மறுவாழ்வு மையத்தில் என் கணவரை போதையிலிருந்து மீட்கும் பொருட்டு சிகிச்சைக்காக அனுமதித்தோம். 2022ம் ஆண்டு தேதி மாதம் நினைவில்லை. 6வது மாதம் என்று நினைக்கிறேன். சுமார் 1 மாதம் என் கணவர் மேற்சொன்ன வேல் பவுண்டேசன் மறுவாழ்வு மையத்தில் என் கணவர் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை எடுத்துக்கொண்டார். அதன் பிறகு 10 நாட்கள், மாதம் ஒருமுறை, 40 நாட்களுக்கு ஒரு முறை என மேற்சொன்ன மறுவாழ்வு மையத்திற்கு நானும் என் கணவரும் சென்று மருந்துகள் வாங்கி வந்தோம்.

4. மேலும் சுமார் 50 நாட்கள் கழித்து என் கணவர் மீண்டும் மது பழக்கத்திற்கு அடிமையாகி அளவுக்கு அதிகமாக மது குடிக்க ஆரம்பித்தார். மீண்டும் ஒரு முறை தேதி, மாதம் நினைவில்லை, என் கணவரை சுமார் 1 மாதங்கள் மேற்சொன்ன மறுவாழ்வு மையத்தில் உள்நோயாளியாக சிகிக்சைக்கு சேர்த்தோம். என் நாத்தனார் மகளுக்கு திருமண ஏற்பாடு நடந்த காரணத்தினால் என் கணவர் தாய்மாமன் என்ற முறையில் விழாவில் பங்கேற்க வேண்டும் என்ற காரணத்தினால் நான், என் மாமியார் மற்றும் என் நாத்தனார் ஆகியோர் என் கணவரை மறுவாழ்வு மையத்திலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தோம். அதன் பிறகு 10 நாட்களுக்கு ஒருமுறை மேற்சொன்ன மறுவாழ்வு மையத்திற்கு நானும் என் கணவரும் சென்று மருந்துகள் வாங்கி வந்தோம்.

5. திருமண நிகழ்வினால் மீண்டும் என் கணவர் மது பழக்கத்திற்கு அடிமையானார். கடந்த 2022ம் ஆண்டு தீபாவளிக்கு முதல் நாள் நானும்

என் கணவரும் வீரசோழன் சந்தைக்கு சென்று பொருட்களை வாங்கி விட்டு மாலை 6.00 மணிக்கு வீட்டுக்கு வந்தோம். நான் வீட்டில் சமையல் செய்துக்கொண்டிருந்தேன். என் கணவர் ஊரின் மையப்பகுதியில் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்தார். அங்கு என் கணவருக்கும் அவருடன் ஏற்கனவே மது அருந்தும்போது பழக்கம் ஏற்பட்ட ஊர்க்காரர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு அதன் காரணமாக என் கணவரை ஊர்க்காரர்கள் கல் மற்றும் அங்கிருந்த பொருட்களால் அடித்து விட்டதாக எனக்கு தெரியவந்தது. நான் அதனை நேரடியாக பார்க்கவில்லை. என் கணவர் தலை மற்றும் வாய் பகுதியில் இரத்தம் வடிந்தது. நான் ஊரின் மையப்பகுதிக்கு செல்வதற்கு முன்பே சண்டை முடிந்துவிட்டது. நான் என் கணவரை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன்.

6. என் கணவர் வீட்டிற்கு வந்து தன்னிடம் வாங்கி குடித்தவர்களே தன்னை அடித்து விட்டதால் இனி தான் உயிர் வாழக்கூடாது என கூறி வீட்டு சுவற்றில் முட்டியும், களைக்கொத்தியால் தன்னைத் தானே தாக்கிக் கொண்டும் மயங்கி கீழே விழுந்து விட்டார். நான் அவரை தடுக்க முயற்சி செய்தேன். நான் என் அக்கம் பக்கத்தாரான பாண்டியராஜன், ஜோதிமுருகன், பிரபு, என் அண்ணன் ஞானசேகரன், ஆட்டோ டிரைவர் முத்துக்குமாரை அழைத்து என் மகளுடன் ஆட்டோவில் என் கணவரை என் மடியில் வைத்துக்கொண்டு சிகிச்சைக்காக வீரசோழன் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு நாடித்துடிப்பு குறைவாக உள்ளதாக கூறினார்கள். டாக்டர் தவமுருகன் கிளினிக்கிற்கு சென்றோம். அங்கு நர்ஸ் தான் இருந்தார். மருத்துவர் இல்லாததால் அங்கிருந்து மருத்துவர் ஜெகநாதன் கிளினிக்கிற்கு சென்றோம். என் கணவரை பரிசோதித்த மருத்துவர் ஜெகநாதன் என் கணவர் இறந்துவிட்டார் என

கூறினார். வீட்டிற்கு வந்துவிட்டோம்.

7. நான் வீட்டிற்கு வந்தவுடன் என் மாமியார் நாகலட்சுமி, சின்ன மாமியார் சின்னபிள்ளை மற்றும் உறவினர்கள் அனைவரும் வீட்டிற்கு வந்து விட்டார்கள். மறுநாள் தீபாவளி என்பதால் சடலத்தை எடுத்து விடலாம் என பேசிக்கொண்டிருந்தபோது என்னுடைய கொழுந்தனாரான ஆனந்த் போலீசிடம் தகவல் தெரிவிப்பதாகவும், மதுரையை சேர்ந்த ஒரு வழக்கறிஞரிடம் சம்பவத்தை பற்றி கூற இருப்பதாகவும் கூறினார். எங்கள் வீட்டிற்கு போலீசார் இரவு 9.00 மணிக்கு வந்து என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்து விட்டு களைக்கொத்தியை போலீசார் எடுத்து சென்றுவிட்டார்கள். இரண்டு போலீசார் மட்டும் எங்கள் வீட்டில் காலை வரை இருந்தார்கள். அதிகாலை சுமார் 3.30 மணியளவில் என் கணவரின் சடலத்தை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு போலீசார் எடுத்து சென்றார்கள்.

8. என்னை மறுநாள் காலை 8.00 மணிக்க நரிக்குடி காவல்நிலையம் அழைத்து சென்றார்கள். இரத்தக்கறை படிந்த சேலையை மாற்றி விட்டு வேறு சேலையை உடுத்துமாறு கூறியதன் பேரில் நான் வேறு சேலையை மாற்றிவிட்டு இரத்தக்கறை படிந்த சேலையை போலீசாரிடம் கொடுத்தேன். பிரேத பரிசோதனை முடிந்து சம்பவத்திற்கு மறுநாள் மாலை 5.00 மணியளவில் என் கணவரின் சடலத்தை கொண்டு வந்தார்கள். என்னையும் இறுதி சடங்கில் கலந்து கொள்வதற்காக காவல் நிலையத்திலிருந்து அழைத்து வந்தார்கள்.

9. இறுதி சடங்கு முடிந்தவுடன் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டார்கள். சம்பவ தினம் தீபாவளிக்கு முந்தைய நாள் ஞாயிற்றுகிழமை ஆகும். போலீசார் என்னை திங்கட்கிழமை காலையில்

வீட்டிலிருந்து விசாரணைக்காக அழைத்து சென்றார்கள். மீண்டும் அன்று மாலை இறுதி சடங்கு நிகழ்வுகள் முடிந்ததும் மறுபடியும் நரிக்குடி காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். புதன்கிழமை இரவு நீதிபதியின் வீட்டில் வைத்து நீதிபதி முன்பு என்னை ஆஜர் செய்து காவலுக்கு உட்படுத்தி மதுரை சிறையில் அடைத்தனர். என் கணவரை காப்பாற்ற நான் முயற்சி செய்தேன். என் கணவரின் இறப்பிற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. நான் எந்த தவறும் செய்யவில்லை. என் மகள் சர்மிளாவிற்காக என்னை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR Digitally signed by M VASANTHA KUMAR

கூடுதல் மாவட்ட நீதிபதி

அருப்புக்கோட்டை.